# விடியல்

## The Dawn

*மாத இதழ், பொழுது – 60*
*ஏப்ரல், 2014*
பக்கங்கள் - 32, தனிச்சுற்றுக்கு மட்டும்

*சிறப்பாசிரியர்*
**முனைவர் நா. கண்ணன்**
கல்லூரி முதல்வர்

*ஆசிரியர்*
**முனைவர் மா. கார்த்திகேயன்**
தமிழ்த்துறைத் தலைவர்

*இணை ஆசிரியர்*
**முனைவர் ப. சரவணன்**
தமிழ் உதவிப் பேராசிரியர்

*ஆசிரியர் குழு*
தமிழ் உதவிப் பேராசிரியர்கள்
அனைவரும்

*வெளியீடு:*

***தமிழ்த்துறை***

***கே.எஸ். ரங்கசாமி***
***கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)***
*திருச்செங்கோடு – 637 215,*
*தமிழ்நாடு, இந்தியா.*
fb: facebook.com/ksrcasthamizh.vidiyal
Blog: ksrcasthamizh.blogspot.in
Email : vidiyalmagazhine@gmail.com
Website: ksrcas.edu

© ***K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)***

*All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the publisher.*

## *இந்த இதழில்...*

*ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு துறையைச் சார்ந்த மாணாக்கர் களின் படைப்புகளே விடியலில் இடம்பெற்று வருகின்றன.*

*அவ் வரிசையில் இம்மாத இதழில் **உயிர்த் தொழில் நுட்பத்துறை**யைச் சார்ந்த மாணாக்கர்களின் படைப்புகள் இடம்பெறுகின்றன.*

*இந்த இதழ் உருவாக உதவிய உயிர்த் தொழில்நுட்பத் துறைத் தலைவர் **முனைவர் வி. சந்திர சேகரன்** அவர்களுக்கும் துறையின் அனைத்துப் பேராசிரியர்கள், மாணாக்கர்கள் ஆகியோருக்கும் நன்றி.*

*மே மாத இதழில் தமிழ்த் துறை மாணாக்கர்களின் படைப்பு கள் இடம்பெறவுள்ளன.*

***வாசகர்களே!***

***இவ் இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துகளையும் அறிவுரை களையும் எங்களுக்குத் தெரிவித்து உதவுக.*** - ஆசிரியர்

# உள்ளடக்கம்


## கட்டுரைகள்

| | |
|---|---|
| பெனிசிலின் | 09 |
| World Health Day | 12 |
| வெள்ளி | 15 |
| You are the Best | 18 |
| அறிவோம் அரசியல் | 26 |
| மருத்துவக் குறிப்புகள் | 27 |
| தமிழின் பெருமை | 28 |

## கவிதைகள்

| | |
|---|---|
| கல்வி | 03 |
| பிஞ்சு விரல்கள் | 03 |
| வளையல் | 04 |
| நடனம் | 04 |
| வெற்றி | 04 |
| அன்பு | 04 |
| படிப்பு | 05 |
| முடிவு | 05 |
| முயற்சி | 05 |
| விடியல் | 05 |
| பசியை மறந்த சிசு | 08 |
| கனவு | 08 |
| தோல்வி | 08 |
| வாழ்க்கை | 12 |
| ஆயுள் | 12 |
| தோல்வி | 14 |
| பெற்றோர் | 14 |
| வறுமை | 14 |
| வெற்றியின் வாசல் | 14 |
| இதயம் | 14 |
| மண் | 17 |
| வறுமை | 17 |
| மனத்திடம் | 17 |
| மழை தரும் மரம் | 18 |
| லஞ்சம் | 24 |
| அறிவியல் | 24 |
| வாழ்க்கை | 24 |
| கருவறை | 29 |
| குழந்தை வரம் | 29 |
| மறுமணம் | 30 |
| தாய் | 32 |

## குறிப்புகள்

| | |
|---|---|
| ஆப்பிள் | 07 |
| நோபல் | 07 |
| யானை | 25 |
| கருவிகள் | 25 |
| சிந்தனைக்கு | 25 |
| பொருந்தாப் பெயர்கள் | 26 |
| ஏழு வகை ஆண்டுகள் | 27 |
| Good Thoughts | 29 |
| இவர்கள் இன்று பேசினால் | 32 |

## கதைகள்

| | |
|---|---|
| பலருக்கும் உதவுக | 03 |
| மகிழ்ச்சியான உறவுகள் | 19 |
| ஆணவத்தின் அழிவு | 30 |

# கல்வி

*"மண்ணை வைரமாக்கி*
*ஆபரணமாய் மிளிரும்;*
*கல்லைச் செதுக்கியே*
*சிற்பமாய்த் தோன்றி*
*இருளை நீக்கி விடியலை நோக்கும் ;*
*விதையினுள் அடங்கும்*
*விருட்சத்தை ஏற்றி*
*வனத்தைப் போன்று*
*அறிவைப் பெருக்கும்;*
*புள்ளியினைப் போட்டுப் பூமியினில்*
*புதுக் கோலமிட்டுக் காட்டும்;*
*நிறைவாக,*
*தரிசையும் விளைநிலமாக்கிச்*
*சேற்றில் செந்தாமரையாகவும்*
*விண்ணில் விண்மீனாகவும்*
*அதுவே மலரும் - மிளிரும்."*

***ஆர். கனிமொழி***
*முதுகலை உயிர்த்தொழில்நுட்பத்துறை*

# பிஞ்சு விரல்கள்

*"நாம் வெளிவர*
*நம் தாய் பட்ட துன்பங்கள் சிறிதல்ல.*
*பட்ட துன்பங்களும் பெற்ற வலிகளும்*
*பெரிதாய்த் தோன்றவில்லை அவளுக்கு*
*நம் பிஞ்சு விரல்கள்*
*அவளைத் தீண்டிய*
*அந்த நொடிகளில்."*

***டி. ரஞ்சிதா***
*இளங்கலை உயிர்த்தொழில்நுட்பத்துறை*
*முதலாண்டு அ பிரிவு*

# பலருக்கும் உதவுக

***ஏ. ராஜலட்சுமி***
*இளங்கலை உயிர்த்தொழில்நுட்பத்துறை*
*முதலாண்டு அ பிரிவு*

*முன்னொரு காலத்தில் ஒரு பெரிய திடலில் இரண்டு மரங்கள் வளர்ந்திருந்தன. ஒன்று அரசமரம். மற்றொன்று கருவேல மரம். கருவேல மரம் பிறவியிலேயே மிகவும் கரடு முரடாக இருந்தது. அதன் உடல் முழுவதும் முட்கள் நிறைந்து இருந்தன. மேலும், அது மிகுந்த கர்வம் உடையதாக விளங்கியது.*

*கோடை காலத்தில் இங்கும் அங்குமாக அலைந்து திரிந்து இரை தேடிக் களைத்துப்போன பறவைகள் தமது அசதியைப் போக்கிக் கொள்வதற்காக அந்தக் கருவேல மரத்தின் கிளைகளில் வந்து அமரும்.*

*கர்வம் கொண்ட அம்மரத்துக்கு அந்தப் பறவைகளைப் பிடிக்க வில்லை. அவற்றைத் தன் கிளைகளில் வந்து அமரக்கூடாது என்று தனது கிளைகளை அசைத்து முட்களால் குத்திக்குத்தி விரட்டியது. அந்த மரம் அப்பறவைகள் வந்து தன் கிளைகளில் கூடு கட்டுவ தையும் அனுமதிக்கவில்லை.*

அருகில் வளர்ந்திருந்த அரசமரம், கருவேல மரத்துக்கு நேர் எதிரிடையாக விளங்கியது.

தன் கிளைகளில் வந்து அமரும் பறவைகளுக்கு இடம் அளித்தது. தனது கிளைகளில் கூடுகட்டிக் கொள்ள அனுமதித்தது. அந்த அரசமரத்தின் நற்பண்புகளைக் கண்ட பறவைகள் அனைத்தும் அந்த மரத்தில் கூடுகட்டி மகிழ்ச்சியாக வாழ்ந்தன.

இதனால் அந்த மரத்தில் நாளுக்கு நாள் பறவைகளின் கூட்டம் மிகுதியானது. அரசமரத்தில் பறவை களின் மகிழ்ச்சியும் ஆரவாரமும் மிகுந்தன.

இவற்றையெல்லாம் விரும்பாத அந்தக் கருவேல மரம், அரசமரத்திடம், "என்னைப் பார் எவ்வளவு நிம்மதியாக இருக்கிறேன். பறவைக் கூட்டத்திற்கு இடம் கொடுத்தாய். இப்போது பறவைகள் எல்லாம் உன்னிடத்தில் இருந்துகொண்டு கும்மாளம் போடு கின்றன" என்று கேலி பேசியது.

ஆனால், அரசமரம், கருவேல மரத்தின் பேச்சினைப் பொருட்படுத்த வில்லை.

நாட்கள் கழிந்தன. ஒருநாள் அந்த ஊரில் திருவிழா நடந்தது. அப்போது சமையல் செய்ய விறகு தேவைப் பட்டது. விறகு வெட்ட இரண்டு பேர் கோடாரியுடன் சென்றார்கள்.

இருவரும் இந்த அரசமரத்தையும் கருவேல மரத்தையும் பார்த்தார்கள். இருவரில் ஒருவர் 'இந்த இரண்டு மரங்களில் எதை வெட்டுவது' என்றார்.

அதற்கு மற்றொருவர் 'இந்த அரசமரத்தில் பறவைகள் நிறைய கூடுகட்டி வாழ்கின்றன. அதனால் நாம் இந்த மரத்தை வெட்டினால் அந்தப் பறவைகள் கூடுகட்ட இடம் இல்லாமல் அலையும். ஆகையால் அந்த அரசமரத்தை வெட்டாமல் விட்டுவிடுவோம். இந்த மரம் பல உயிர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கிறது. ஆனால், இந்தக் கருவேல மரம் யாருக்கும் பயனில்லாமல் இருக்கிறது. ஆகையால், நாம் இந்த மரத்தை வெட்டிவிடுவோம்' என்றார்.

கோடாரியை ஓங்கி அந்தக் கருவேல மரத்தை வெட்டினார்கள். வேதனை தாங்கமுடியாமல் அந்த மரம் அழுதது.

'யாருக்கும் (பறவைகளுக்கு) இடம் கொடுக்காதது எவ்வளவு தவறு' என்பதனை நினைத்து வருந்தியது.

## வளையல்

*"கன்னிப் பெண்களின்*
*கைகளில் குதூகளிக்கும்.*
*இவள், ஏனோ!*
*விதவைகளின்*
*கைகளில் கலங்குகிறாள்."*

***பி. மோகனபிரியா***
*இளங்கலை உயிர்த்தொழில்நுட்பத்துறை*
*முதலாண்டு அ பிரிவு*

## வெற்றி

*"மண் என்ற குழந்தையிடம்*
*செடி என்ற படிப்பை நட்டேன்.*
*நீர் என்ற அறிவை ஊற்றினேன்.*
*பூ, காய் என உருமாறிப்*
*பின் கனிந்து வெற்றிக்'கனி'யினை*
*எனக்குத் தந்தது."*

***ஏ. விக்னேஷ்***
*இளங்கலை உயிர்த்தொழில்நுட்பத்துறை*
*முதலாண்டு ஆ பிரிவு*

## அன்பு

*"அன்பை வெளிப்படுத்த யோசிக்காதே!*
*கோபத்தை வெளிப்படுத்தும் முன்*
*யோசிக்க மறந்துவிடாதே!"*

***ர. சந்தோஷ் குமார்***
*இளங்கலை உயிர்த்தொழில்நுட்பத்துறை*
*இரண்டாமாண்டு*

## நடனம்

*"மொழியும் தேவையில்லை*
*இசையும் தேவையில்லை*
*உணர்வின் வெளிப்பாடுகளே*
*உள்ளத்தின் பிரதிபலிப்புகள்.*
*நவரசங்களுடன் கூடிய நளினமும்*
*நாகரிக வெளிப்பாட்டின்*
*சின்னமே நடனம்.*
*சந்தோஷத்தின் களம்*
*இதயம் போடும் மெட்டிற்கு*
*இமைகள் கூட நடனமாடும்.*
*மகிழ்ச்சியின் வெளிப்பாடு*
*துன்பத்தின் உச்சம்.*
*சாதிவெறி இறந்து*
*சாதிக்கும் வெறி பிறக்கும்*
*நடனத்தில்.*
*மனிதனின் அசைவுமட்டுமல்லை;*
*மயிலின் தோகை*
*விரிப்பும்கூட நடனமே!*
*மௌனத்தின் உட்பொருள் நடனமே!*
*வரத்தின் கொடையும் நடனமே!*
*வதத்தின் கொடூரமும் நடனமே!*
*ஒற்றுமையின் பலம்.*
*வேற்றுமையின் எதிர்ப்பு.*
*தொன்மைக் கால*
*மனிதர்களின் வரலாற்றை*
*நம் கண்முன் உணர்த்தும் பண்பு*
*நடனத்திற்கும் உண்டு.*

***எஸ். கே. லாவண்யா***

இளங்கலை உயிர்த்தொழில்நுட்பத்துறை
இரண்டாமாண்டு

## படிப்பு

*“விதியை மறந்து*
*கடமையைத் துறந்து*
*கவலையில் துடிக்கின்றான்*
*பிடிச்சோற்றுக்கு அலைகின்றான்.*

*சாதி, மத வேறுபாடில்லை*
*கோயிலில் கிடைக்கும்*
*ஒருவேளை அன்னத்திற்கு.*

*படித்தோரை பாவியாய்ப்*
*பார்க்கும் சமூகமே!*
*பட்டம் படித்தவன்*
*பட்டினியாய்க் கிடக்கின்றான்.*

*உன்னால் முடியும் என்ற*
*சொல்லை நீ உதிரத்தில்*
*விதைக்க மறக்கவில்லை.*

*தாழ்வு மனப்பான்மையை நீ ஒழி.*
*உன் வாழ்க்கைக்குப் பிறக்கும் வழி.*

*ஏய் சமூகமே!*
*பணத்திற்கு அளிக்கும்*
*வாய்ப்பை ஏன் நீ*
*படித்தவனுக்கு அளிக்க மறுக்கிறாய்?”*

***பி. சிக்லாபெர்ல்***
இளங்கலை உயிர்த்தொழில்நுட்பத்துறை
இரண்டாமாண்டு

## முடிவு

*“உன்னால் முடியும் என்றால்*
*முடியும்.*
*முடியாது என்றால்*
*முடியாது. ஆகவே,*
*முடிவை நீயே முடிவு செய்.”*

***ர. சந்தோஷ் குமார்***
இளங்கலை உயிர்த்தொழில்நுட்பத்துறை
இரண்டாமாண்டு

## முயற்சி

*“விடியும் என்ற நம்பிக்கையில்தான்*
*விழி மூடி உறங்குகின்றோம்*
*முடியும் என்ற துணிவோடு.*
*முயற்சி எடு முடிவில்லாமல்.”*

***கே. பரணி***
இளங்கலை உயிர்த்தொழில்நுட்பத்துறை
மூன்றாமாண்டு

## விடியல்

*“விடியலை நோக்கிச் செல்பவன்*
*விழி மூடி வெளிச்சம் தேடலாமா?*
*கனவெனும் சந்தையில் உன்*
*கடமைப் பூக்களை விற்கலாமா?*
*முள்ளிருக்கும் செடியில்தான்*
*முகம் மலர்ந்த பூக்கள் இருக்கும்.*
*துன்பம் கண்ட வாழ்வில்தான் பெரிய*
*இன்பச் சாரல் பொழியும்.*
*நாளை என்பது நமக்காக.*
*நாளும் உழைப்போம் அதற்காக.”*

***ஆர். சத்யா***

*இளங்கலை உயிர்த்தொழில்நுட்பத்துறை*
*முதலாண்டு ஆ பிரிவு.*

# ஆப்பிள்

***நீங்கள் உட்கொள்ளும் ஆப்பிள் நல்லதுதான?***

*நம் நாட்டில் நாம் பயன்படுத்தும் ஆப்பிள்களில் 80 சதவிகிதம் உடல்நலத்திற்குக் கேடானவை.*

*ஆப்பிளின் நிறத்தை அதிகப்படுத்த அதற்கு அதிக அளவில் நிறமிகள் பயன்படுத்தப்படுகின்றன.* coloring *agent and candle wax மற்றும் மெழுகுப் பொருட்களும் பயன்படுத்தப் படுகின்றன.*

*இதனால் ஏற்படும் பாதிப்புகள் பின்வருமாறு:*

- *குடல் பாதிப்பு*
- *செரிமான பாதிப்பு*
- *குடல் அமைப்பு*
- *வயிற்று வலி*

***நிறமிகள் பயன்படுத்தப்பட்ட தீங்கான ஆப்பிள்களைக் கண்டறிவது எப்படி?***

*ஆப்பிள் பழத்தின் தோலினைக் கத்தியால் சுரண்டியும் தீயில் லேசாக வாட்டியும் அதில் மெழுகுப் பூச்சு உள்ளதா என்று சோதிக்கலாம்.*

***ஜெ. ஹரிஷ்***
*இளங்கலை உயிர்த்தொழில்நுட்பத்துறை*
*மூன்றாமாண்டு*

# நோபல்

*அமைதிக்கான நோபல் பரிசு:*

*அமைதிக்கான முதல் நோபல் பரிசினைப் பெற்றவர் ஹென்ரி டூனன்ட் (1901) – ஜெனீவா.*

*அமைதிக்கான நோபல் பரிசினைப் பெற்ற முதல் பெண் பெர்தா வோன் சுட்னர் (1905) – ஆஸ்திரியா.*

*அமைதிக்கான நோபல் பரிசினை மிகக் குறைந்த வயதில் பெற்றவர் தவக்கல் கர்மன் - வயது 32 (2011) – யேமன்.*

*அமைதிக்கான நோபல் பரிசினைப் பெற்ற வயதில் மூத்தவர் ஜோசப் ராட்பிளாட் வயது 87 (1995) – போலந்து.*

*சிறையில் இருந்தபோது அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர்கள்:*

- *பத்திரிகையாளர் - கார்ல் வோன் ஒசியிட்ஸ்கி (ஜெர்மனி)*
- *மக்களாட்சிக்கான தேசிய அமைப்பின் தலைவி – ஆங் சான் சூச்சி (சூயி) (மியான்மர்)*
- *மனித உரிமைப் போராளி – லியூஸ் சியாவோபோ (சீனா)*

*அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற நாடுகள்:*

- *அமெரிக்கா – 21 முறை*
- *பிரான்ஸ் - 9 முறை*
- *பிரிட்டன் - 7 முறை*

*அதிகபட்சமாக மூன்று முறை ரெட்கிராஸ் அமைப்பு அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றுள்ளது.*

*அமைதிக்காக இதுவரை நோபல் பரிசு பெற்றவர்கள் 94 பேர். அதில் பெண்கள் 15 பேர்.*

***கௌசல்யா***
*முதுகலை உயிர்த்தொழில்நுட்பத்துறை*
*இரண்டாமாண்டு*

## கனவு

*“இமைமூடிக் கொண்டாலும்*
*விழி காணும் ஓர் உலகம்.*
*நிஜமாய் இல்லாவிட்டாலும்*
*தொடரும் நிழல் போன்ற ஓர் உறவு.*
*மௌனங்களே பாஷைகளான போதும்*
*புன்னகை பேசத் தொடங்கியது.*
*வானம் வசப்பட்டது.*
*இமயமும் கைவிரலோடு மாயமானது.*
*கடல் அலை பன்னீர் தெளிக்க*
*வண்டுகளின் ரீங்காரம் சிந்துபாட*
*சொர்க்கம் திறந்ததென்று*
*இமையும் பிரிந்தது.*
*கதிரவன் வரவேற்க கனவும்*
*கலைந்தது – கனவாக.”*

***கே. பரணி***
*இளங்கலை உயிர்த்தொழில்நுட்பத்துறை*
*மூன்றாமாண்டு*

## பசியை மறந்த சிசு

*“பனி பொழியும் அதிகாலையில்*
*பசிக்கொடுமையில் பச்சிளங்குழந்தை*
*பரிதாபமாகக் கண்ணீர் விட*
*ஊனமுற்ற தகப்பனால்*
*உடனே எழ முடியவில்லை.*
*வாசலில் பால்காரன்*
*வந்து போகிறான்.*
*பையில் பணமில்லை.*
*படிக்கட்டில் பாதம் வைக்க*
*மனமில்லை - பாவப்பட்ட தகப்பன்.*
*அழும் சத்தம் அதிகமாக –*
*குழந்தையின் தாய் எழுகின்றாள்.*
*அழுக்குச் சேலையில்*
*தன் மழலையின்*
*கண்ணீரைத் துடைக்கின்றாள்.*
*அழுத சுவடு தெரியாமல்*
*ஆனந்தமாகச் சிரிக்கின்றது*
*அக்குழந்தை.*

***பி. முத்தழகன்***
*இளங்கலை உயிர்த்தொழில்நுட்பத்துறை*
*இரண்டாமாண்டு*

## தோல்வி

*“தவறுகளின் முடிவென்றாலும்*
*வெற்றியின் தொடக்கம் இதுவாகும்.”*

***கே. பரணி***
*இளங்கலை உயிர்த்தொழில்நுட்பத்துறை*
*மூன்றாமாண்டு*

# பெனிசிலின்

***அ. வீரராணி***
*முதுகலை உயிர்த்தொழில்நுட்பத்துறை*
*இரண்டாமாண்டு*

*உலகம் அறிந்துள்ள மருத்துவ முன்னேற்றங்களுள் பெனிசிலின் கண்டுபிடிப்பு தனிச்சிறப்பு வாய்ந்தது.*

*பெனிசிலின் காலத்திற்கு முன் பிரசவத்தில் பெண்கள் இறப்பதும், பிறந்தபின் குழந்தைகள் இறப்பதும் சர்வ சாதாரணம். லேசான சிராய்ப்புகளும் கீறல்களும் கூட மரணத்திற்கு இட்டுச் சென்றன. ஒரு நுண்ணுயிரை வைத்து இன்னொன்றைக் கொல்ல முடிகிற பெனிஸிலின் போன்ற நச்சுமுறி மருந்துகள் கண்டுபிடிக்கப் பட்ட பிறகுதான் பல நோய்களிலிருந்து மனிதர்களைக் காப்பாற்ற முடிந்தது.*

*பெனிசிலினைக் கண்டுபிடித்து நவீன நச்சுமுறி மருந்துகள் யுகத்தைத் தொடங்கிவைத்த பெருமைக்குரிய விஞ்ஞானிதான் அலெக்ஸாண்டர் ஃப்பௌமிங். பெனிசிலின் உலகெங்கிலும் உள்ள 20 கோடி மக்களின் உயிரைக் காப்பாற்றியுள்ளது என்கிறது ஒரு மதிப்பீடு.*

***பிறப்பு:***

*ஃப்ளெமிங் 1881 ஆகஸ்ட் 6 அன்று ஸ்காட்லாந்து நாட்டில் பிறந்தவர். அவரது இளமைக்கல்வி இயற்கையெழில் சூழ்ந்த மலைப் பகுதியில் அமைந்தது. அங்குதான் இயற்கையை ரசிக்கவும், எதையும் கூர்ந்து நோக்கி அறியவும் அவர் பயிற்சி பெற்றார். பின்னாளில் அவர் பெனிஸிலின் என்ற அற்புத மருந்தைக் கண்டுபிடிக்க இப் பயிற்சியே உதவி செய்தது.*



*பாலிடெக்னிக் படிப்பை முடித்தபிறகு 16 வயதிலேயே கப்பல் நிறுவனம் ஒன்றில் அவர் அலுவலராகச் சேர்ந்தார். எழுத்தர் பணி அவருக்கு மனநிறைவை அளிக்கவில்லை. தூரத்து உறவினர் ஒருவரிடமிருந்து கிடைத்த சொத்து, அவர் மிகத் தாமதமாக 20 வயதில் மருத்துவக் கல்லூரியில் சேர வழி செய்தது.*

**நோய்க்கிருமிகளுக்கு எதிரான போர்:**

படிப்பை முடித்த பிறகு, நோய்க்கிருமிகளுக்கெதிரான ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த ஆல்ம்நாத் ரைட் என்பவரிடம் உதவியாளராகச் சேர்ந்தார் ஃப்ளெமிங். ஜெர்மன் விஞ்ஞானி பால் என்ரிக் என்பவர் 'சிஃபிலிஸ்' என்ற கொடிய பால்வினை நோய்க்கு 'ஸல்வார்ஸன்' என்ற மருந்தைக் கண்டுபிடித்திருந்தார். ரத்தத்தைப் பரிசோதித்து அந்த நோயை எளிதில் கண்டறியும் ஒரு மேம்பட்ட முறையை ஃப்ளெமிங் அறிமுகப்படுத்தினார்.

நான்கு ஆண்டுகள் நடந்த முதல் உலகப்போரில் ரைட் குழுவினரின் தடுப்பூசி மட்டும் பயன்படுத்தப்பட்டிரா விட்டால், ஆயிரக்கணக்கானோர் டைஃபாய்டு காய்ச்சலுக்குப் பலியாகி யிருப்பார்கள். போரில் காயமடைந்த வீரர்களுக்கு கார்பாலிக் அமிலம், போரிக் அமிலம், ஹைட்ரஜன் பெராக்ஸைட் போன்ற நச்சுமுறி மருந்துகளையே அக்காலத்தில் பயன்படுத்தி வந்தனர். இந்த மருந்துகள் சிகிச்சைக்கு உதவாததோடு, இரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்களை அழித்து மேலும் பலர் இறப்பதற்கே வழிவகுத்தன என்று ஃப்ளெமிங்க் நிரூபித்தார். குறைபாடற்ற நச்சுமுறி மருந்தைக் கண்டுபிடிப்பதில் அவர் கவனம் திரும்பியது.

பல்வேறு வகை நுண்ணுயிர்களை தட்டுகளில் வளர்த்து அவற்றின் இயக்கங்களை அவர் ஆராயத் தொடங்கினார். தனது மூக்கிலிருந்து ஒழுகிய நீரிலிருந்தே ஓரிரு சொட்டுகள் எடுத்து பாக்டீரியாக்கள் அடங்கிய தட்டில் வைத்து வளர்த்தபோது, சளித்திரவத்தைச் சுற்றியிருந்த பாக்டீரியாக்கள் மட்டும் அழிக்கப் பட்டிருந்ததைப் பார்த்தார். இதேபோல் கண்ணீர், உமிழ் நீர், சீழ் போன்ற உடலில் சுரக்கும் பல திரவங்களை எடுத்து ஆராய்ச்சிக்கு உட்படுத்தினார். இந்த திரவங்கள் அனைத்திற்கும் நோய்க்கிருமிகளை வளராது தடுக்கும் ஆற்றல் இருப்பதைக் கண்டார். இயற்கை யிலேயே அமைந்த இந்த நச்சு முறிபொருளுக்கு 'லைசோசைம்' எனப் பெயரிட்டார்.

1928ஆம் ஆண்டில் நுண்ணுயிர் கள் வளர்க்கப்பட்ட ஒரு தட்டை நோக்கிய போது, லைசோசைம் அதுவரை செய்திராத ஒரு செயலை காளான் செய்திருந்ததைத் தற்

செயலாகக் கண்டார். கொப்புளங் கள், கட்டிகள், மூக்கு, தொண்டை, தோல் இவற்றில் ஏற்படும் தொற்றுநோய்களை வரவழைக்கும் ஸ்டாபைலொகாக்கி எனப்படும் கிருமிகளை காளான் அழித்திருந்தது. அது மட்டுமல்ல, அந்தக் காளானின் சாரம் வெள்ளை அணுக்களை அழிக்கவில்லை என்றும் வேறு திசுக்களைப் பாதிக்கவில்லை என்றும் சோதித்துத் தெரிந்துகொண்டார். காளானில் பரவிய அப்பொருளுக்கு 'பெனிசிலின்' எனப் பெயரிட்டார் ∴ப்ளெமிங். ஆனால் பெனிசிலினைப் பெரிய அளவில் அப்போது உற்பத்தி செய்ய இயலவில்லை. ஹோவர்டு ∴ப்ளோரே, எர்னஸ்ட் செயின் ஆகியோர் அடங்கிய ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகக் குழுவினர் 14 ஆண்டுகள் கழித்து அதைச் சாதித்தனர். பெனிசிலின் ஒவ்வாமை உடையவர்களுக்கு வேறு பாதுகாப்பான நச்சுக்கொல்லி மருந்துகளைக் கண்டுபிடிப்பதிலும் அக்குழுவினர் வெற்றியடைந்தனர்.

பாராட்டுக்களும் விருதுகளும்:

- 1945ஆம் ஆண்டில் அலெக்ஸாண்டர் ∴ப்ளெமிங், ஹோவர்டு ∴ப்ளோரே, எர்னஸ்ட் செயின் ஆகிய மூவருக்கும் மருத்துவம் அல்லது உடலியங்கியலுக்கான நோபெல் பரிசு வழங்கப்பட்டது.
- ஆறாம் ஜோர்ஜ் மன்னரால் 1944 ஆம் ஆண்டில் நைட் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.
- 1999 ஆம் ஆண்டில் டைம் சஞ்சிகையால் வெளியிடப்பட்ட இருபதாம் நூற்றாண்டின் மிக முக்கியமான 100 நபர்களின் பட்டியலில் அலெக்சாண்டர் பிளெமிங்கும் உள்ளடக்கப் பட்டார்.
- 2000 ஆம் ஆண்டு நிறைவுறும் தறுவாயில் சுவீடனிலிருந்து வெளிவரும் பிரசித்திபெற்ற மூன்று சஞ்சிகைகள் பென்சிலினைக் கடந்த ஆயிரமாண்டு காலத்தின் சிறந்த கண்டுபிடிப்பாக அறிவித்தன.
- 2002 ஆம் ஆண்டில் பிபிசியால் மக்களின் வாக்களிப்பின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட பிரித்தானியாவின் முக்கியமான 100 நபர்களின் பட்டியலில் அலெக்சாண்டர் பிளெமிங்கும் உள்ளடக்கப்பட்டார்.
- அலெக்சாண்டர் பிளெமிங்கின் ஞாபகார்த்தமாக சிறுகோள் படையிலுள்ள ஒரு சிறுகோளுக்கு 91006 பிளெமிங் எனப் பெயரிடப்பட்டது.

## வாழ்க்கை

*"வாழ்க்கையின்*
*முதல்பக்கம் கருவறை.*
*கடைசிப் பக்கம் கல்லறை.*
*நடுவில் இருக்கும் பக்கங்களைப்*
*புன்னகையால் எழுதுங்கள் -*
*கண்ணீரால் அழித்து விடாதீர்கள்.*
*விட்டுக் கொடுங்கள்*
*விருப்பங்கள் நிறைவேறும்.*
*தட்டிக் கொடுங்கள்*
*தவறுகள் குறையும்.*
*மனம் விட்டுப் பேசுங்கள்*
*அன்பு பெருகும்."*

**பி. சுப்பிரமணி**
*முதுகலை உயிர்த்தொழில்நுட்பத்துறை*
*இரண்டாமாண்டு*

## ஆயுள்

*"பூக்களுக்கு ஒருநாள்தான்*
*ஆயுள் - ஆனால்,*
*அதையும் பறித்து*
*பூஜை செய்கிறான் மனிதன் -*
*தனக்கு நூறு ஆண்டுகள்*
*ஆயுள் நீளவேண்டி."*

**தி. நந்தகுமார்**
*முதுகலை உயிர்த்தொழில்நுட்பத்துறை*
*இரண்டாமாண்டு.*

## World Health Day

*The **World Health Day** is celebrated every year on 7 April, under the sponsorship of the World Health Organization (WHO).*

*In 1948, the WHO held the First World Health Assembly. The Assembly decided to celebrate 7 April of each year, with effect from 1950, as the World Health Day. The World Health Day is held to mark WHO's founding, and is seen as an opportunity by the organization to draw worldwide attention to a subject of major importance to global health each year.*

*The WHO organizes international, regional and local events on the Day related to a particular theme. Resources provided continue beyond 7 April, that is, the designated day for celebrating the World Health Day.*

*World Health Day is acknowledged by various governments and non-governmental organizations with*

*interests in public health issues, who also organize activities and highlight their support in media reports, such as through press releases issued in recent years by US Secretary of State Hillary Clinton and the Global Health Council.*

*World Health Day 2014 will spotlight some of the most commonly known vectors – such as mosquitoes, sandflies, bugs, ticks and snails – responsible for transmitting a wide range of parasites and pathogens that can cause many different illnesses.*

*Mosquitoes, for example, transmit malaria - the most deadly vector-borne disease, causing an estimated 660 000 deaths annually worldwide - as well as dengue fever, lymphatic filariasis, chikungunya, Japanese encephalitis and yellow fever.*

*The goal of the World Health Day 2014 campaign is better protection from vector-borne diseases, especially for families living in areas where diseases are transmitted by vectors, and travelers to countries where they pose a health threat. The campaign also advocates for health authorities in countries where vector-borne diseases are a public health problem or emerging threat, to put in place measures to improve surveillance and protection.*

*2014: Vector-borne diseases*
*2013: Healthy heart beat, Healthy blood pressure*
*2012: Good health adds life to years*
*2011: Anti-microbial resistance: no action today, no cure tomorrow*
*2010: Urbanisation and health: make cities healthier*
*2009: Save lives, Make hospitals safe in emergencies*
*2008: Protecting health from the adverse effects of climate change*
*2007: International health security*
*2006: Working together for health*
*2005: Make every mother and child count*
*2004: Road safety*
*2003: Shape the future of life: healthy environments for children*
*2002: Move for health*
*2001: Mental Health: stop exclusion, dare to care*
*2000: Safe Blood starts with me*

***Ref:*** *www.who.org,*

***Dr. P. Saravanan, Asst.Prof. of Tamil***

## தோல்வி

*“பனித்துளிகள்*
*மலர்ந்திருக்கும் ரோஜாவே*
*உனக்குள் என்ன எத்தனை*
*பெரிய சோகமா?*
*இரவெல்லாம் அழுது புரண்டாயோ?*
*விடிந்ததும் இதழ்களின் மீது*
*கண்ணீர்ச் சுவடுகள்”*

**கே. பரணி**
*இளங்கலை உயிர்த்தொழில்நுட்பத்துறை*
*மூன்றாமாண்டு*

## வறுமை

*“பணம் இல்லாத நாளைப்*
*பஞ்சம் என்று சொன்னால்;*
*நீர் இல்லாத நாளை*
*வறட்சி என்று சொன்னால் ;*
*உயிரில்லாத உடம்பைப்*
*பிணம் என்று சொன்னால் ;*
*அன்பில்லா உன்னை*
*என்ன சொல்ல?*
*மனிதா!*
*புன்னகையை மறந்துவிட்டாய்!*
*பாசத்தைத் தொலைத்துவிட்டாய்!*
*பரதேசியாக நிற்கிறாய்.”*

**அ. மெருண்ராஜ்**
*இளங்கலை கணினி அறிவியல்*
*இரண்டாமாண்டு ‘ஆ’ பிரிவு.*

## பெற்றோர்

*“தூங்குகின்ற குழந்தையின்*
*விடியல் ஒளி பெற*
*தூங்காமல் உழைக்கும்*
*விடி வெள்ளிகள்.”*

**என். தினேஷ்**
*முதுகலை உயிர்த்தொழில்நுட்பத்துறை*
*இரண்டாமாண்டு.*

## வெற்றியின் வாசல்

*“வெற்றியின் வாசலைத்*
*தேடி வந்தவர்கள்*
*உண்மையில்*
*ஆயிரம் தோல்விகளிடம்*
*முகவரி கேட்டிருப்பார்கள்.”*

**தி. நந்தகுமார்**
*முதுகலை உயிர்த்தொழில்நுட்பத்துறை*
*இரண்டாமாண்டு.*

## இதயம்

*“நீயும் என்னைப் பார்த்ததில்லை*
*நானும் உன்னைப் பார்த்ததில்லை.*
*நீ வாழ நான் துடித்தாலும்*
*நான் வாட*
*நீ அல்லவா அழுகின்றாய்!*

**கே. பரணி**
*இளங்கலை உயிர்த்தொழில்நுட்பத்துறை*
*மூன்றாமாண்டு*

# வெள்ளி

***எம். பிரியங்கா,***
*இளங்கலை உயிர்த்தொழில்நுட்பத்துறை*
*முதலாண்டு ஆ பிரிவு.*

*வெள்ளி (Venus) சூரியக் குடும்பத்தில் சூரியனிலிருந்து இரண்டாவதாக அமைந்துள்ள ஒரு கோளாகும். நம் இரவு வானத்தில் நிலவுக்கு அடுத்து வெள்ளியே பிரகாசமானது. சூரிய உதயத்துக்கு முன்னும்,சூரிய அஸ்தமனத்துக்குப் பின்னும் வெள்ளி தன் உச்சப்பிரகாசத்தை அடைகிறது, ஆதலாலே அது காலை நட்சத்திரம் மற்றும் மாலை நட்சத்திரம் என்று அழைக்கப்படுகிறது. சூரியக் குடும்பத் திலே மிகவும் வெப்பமான வளிமண்டலத்தைக் கொண்ட கோள் வெள்ளியாகும். இது அதிகரித்த பச்சைவீட்டு விளைவால் ஏற்பட்டதாகும். இதன் சூழல் உயிரினங்கள் வாழ முடியாத நிலையைக் கொண்டுள்ளது.*

### *பௌதிகப் பண்புகள்*

*இது புவியைப் போலக் கற்கோளத்தைக் கொண்ட கோளாகும். இதன் திணிவும் ஆரை நீளமும் கிட்டத்தட்ட புவியினுடையதை ஒத்துப் போவதால் இக் கோளானது புவியின் தங்கை எனவும் அழைக்கப்படுகின்றது. இதன் ஆரை 12092 கிலோமீட்டர் நீளத்தைக் கொண்டது.*

### *புவியியல்*

*வெள்ளியின் மேற்பரப்பில் 80 சதவீதம் சமவெளியாய் உள்ளது. அதில் 10 சதவீதம் மென்மையான லோபடே சமவெளியும் 70 சதவீதம் மென்மையான, எரிமலை சம வெளியும் அடக்கம். இதில் வடதுருவத்தில் ஒரு கண்டமும் நிலநடுக்கோட்டிற்குச் சற்று தெற்கில் ஒரு கண்டமும் அமையப் பெற்றுள்ளது. ஆஸ்திரேலியா கண்டத்திற்கு இணையான பரப்பளவு கொண்ட வடக்கு கண்டம் பாபிலோனியக் காதல் தெய்வமான இசுதாரின் பெயரில் அழைக்கப் படுகிறது. மேக்ஸ்வெல் மோன்டசு, வெள்ளியின் மிக உயர்ந்த மலையாகும். அதன் சிகரம் சராசரி மேற்பரப்பு உயரமான 11 கி.மீ. தொலைவில் உள்ளது. பரப்பளவில் இரண்டு தென் அமெரிக்கா கண்டங்களுக்கு இணையான தெற்கு கண்டம் அப்ரோடைட் டெர்ரா கிரேக்க காதல் தெய்வத்தின் பெயரால் அழைக்கப்படுகிறது.*

### *புறத் தோற்றம்*

புவியில் இருந்து மானிடர் நோக்கும் போது வெள்ளிக் கோளே எந்த விண்மீனை (சூரியனைத் தவிர்த்து) விடவும் வெளிச்சமாக உள்ளது. வெள்ளி பூமியின் அருகில் இருக்கும் போது அதன் பிரகாசம் அதிகமாகவும், தோற்றப்பருமன் -4.9 ஆகவும், பிறை கட்டத்திலும் காணப்படுகிறது. சூரியன் பின்னொளி வீசும் போது இதன் பிரகாசம் -3 ஆக மங்குகிறது. இக்கோள் நடுப்பகலிலும் காணத்தக்க பிரகாசமாக இருப்பதுடன் சூரியன் கீழ் வானில் இருக்கும் போது எளிதில் காணக் கூடியதாகவும் இருக்கிறது. இதன் சுற்றுப்பாதை சூரியனுக்கும் புவியின் சுற்றுப் பாதைக்கும் நடுவில் இருப்பதால் புவியில் இருந்து பார்க்கும் போது சூரியனின் நிலநடுக்கோட்டில் இருந்து 47 டிகிரி சாய்வு வரை அதிகமாகச் செல்வது போல் தோற்றம் அளிக்கிறது.

### மானிடர் குடியேற்றத்தின் சாத்தியம்

மானிடர் இதைப் போன்று பெரிய அளவில் மிதக்கும் நகரங்களை வெள்ளியின் விண்ணில் அமைக்க வாய்ப்புண்டு.

வெள்ளிக் கோள் பரப்பின் சூழல் தற்போது மானிடர் வாழும் சூழலைப் பெறவில்லை. ஆனால் வெள்ளிக் கோள் பரப்பில் இருந்து ஐம்பது கிலோமீட்டர்களுக்கு மேல் உள்ள வளி மண்டலம் மனிதர் வாழ்வதற்கு ஏற்ற அடிப்படை வாயுக்களான நைட்ரசனையும் ஆக்சிசனையும் பெற்றுள்ளது. அதனால் வெள்ளியின் வானில் மானிடர் மிதக்கும் நகரங்களை உருவாக்க வாய்ப்புள்ளது. காற்றினும் எடை குறைந்த மிதக்கும் நகரங்களை உருவாக்கி அதில் நிரந்தரக் குடியேற்றங்களை அமைக்க முடியும். ஆனால் இதில் மிகப்பெரிய அளவுக்குப் பொறியியல் தொழில்நுட்பச் சவால்களும், இந்த உயரத்தில் உள்ள கந்தக அமிலத்தின் அடர்த்தியும் இதற்குத் தடைகள் ஆகும்.

### சூரியனைக் கடக்கும் போது

வெள்ளிக்கோளின் சூரியக் கடப்பு அல்லது வெள்ளியின் இடைநகர்வு என்பது சூரியக் குடும்பத்தில் உள்ள வெள்ளி கோளானது சுற்றுப்பாதையில் வரும்போது சூரிய வட்டத்தைக் கடப்பதைக் குறிப்பதாகும். அதாவது வெள்ளிக்கோள் சூரியனுக்கும், பூமிக்கும் இடையில் செல்வதைக் இது குறிக்கும். இந்த இடைநகர்வின் போது வெள்ளி சூரிய வட்டத்தில்

ஒரு சிறு கரும் புள்ளியாகக் கண்ணுக்குத் தெரியும். இந்த இடைநகர்வு இடம்பெறும் காலம் பொதுவாக மணித்தியாலங்களில் கூறப்படுகிறது. இந்த இடைநகர்வு நிலவினால் ஏற்படும் சூரிய கிரகணத்தை ஒத்தது. வெள்ளி பூமியில் இருந்து அதிக தூரத்தில் இருப்பதனால் (நிலவுக்கும் பூமிக்கும் இடையிலுள்ள தூரத்தை விடவும், வெள்ளிக்கும் பூமிக்குமிடையிலுள்ள தூரம் கிட்டத்தட்ட 100 மடங்கு அதிகம்) வெள்ளியின் விட்டம் நிலவை விட 3 மடங்கு அதிகமானதாக இருந்தாலும்கூட, வெள்ளி இடைநகர்வின்போது, வெள்ளி மிகச் சிறியதாகத் தெரிவதுடன், மிக மெதுவாக நகர்வதையும் காணலாம்.

வெள்ளியின் வெப்பநிலை 465 டிகிரி செல்சியஸ். இது சூரியனைச் சுற்றிவர 225 நாட்கள் ஆகும். தன்னைத்தானே ஒருமுறை சுற்றிவர 243 நாட்கள் ஆகும். பூமியிலிருந்து இது 4கோடி கி.மீ. தொலைவில் உள்ளது. 583 நாட்களுக்கு ஒருமுறை இது சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் வரும்.

## மண்

"மனிதனைவிட
மண்ணிற்குத்தான்
மழையின் மகிமை தெரியும்.
அதனால்தான்
அது விழுந்தவுடனேயே
அதனைச் சேமிக்கின்றது."

**என். தினேஷ்**
முதுகலை உயிர்த்தொழில்நுட்பத்துறை
இரண்டாமாண்டு.

## வறுமை

"அடை மழையிலும்
நனையாமல் எரிகிறது
ஏழையின் வயிறு"

**தி. நந்தகுமார்**
முதுகலை உயிர்த்தொழில்நுட்பத்துறை
இரண்டாமாண்டு.

## மனத்திடம்

"தோல்வியிலும்
கண்ணீரைச் சேமியுங்கள்.
ஏனெனில்
தண்ணீரின் சேமிப்பு குறைவு."

**என். தினேஷ்**
முதுகலை உயிர்த்தொழில்நுட்பத்துறை
இரண்டாமாண்டு.

## *Attention Please*
## You are the Best

*The truth of the matter is that you are the best in your goals, job etc. Everyone is competing to take your position, coarse, job but they cannot be able to take what belongs to you if you continue working hard, setting goats and achieving them Focus on what is good in your life and you will always be the best.*

*Where are you in this journey of life?*

*If you are ordinary the planet earth doesn't allow ordinary people to exist hurry up before you extinct like dinosaurs.*

*If you are good currently bad people are rare to find because everybody is against them so all people are good pull up your socks and go to category of Better people and realize the difference.*

*If you are better the game is not over, sliding book is easy. Jump to the best.*

*If you reach to the best everybody will please you honor you but keep knowing that you are on top of a needle be careful not to be Pearced. Increase your effort to go to the next level of extraordinary. The world will be competing to have you. You shall be opening the new covers of world history, books B news headlines this will be your new world of popularity.*

***Paul Mwangi***

***II B.Sc. Biotecnology.***

## மழை தரும் மரம்

*"மண்ணிற்கு மட்டுமல்ல*
*மனிதற்கும் ஏக்கம்தான்*
*மண்வாசம் பெற.*
*மரம் வளர்ப்போம் -*
*மழை பெறுவோம்"*

***என். தினேஷ்***

*முதுகலை உயிர்த்தொழில்நுட்பத்துறை*

*இரண்டாமாண்டு.*

# மகிழ்ச்சியான உறவுகள்

பா.பரிதா
ஆய்வியல்நிறைஞர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை

ஓர் ஊரில் 'பலராமன்' என்பவன் வாழ்ந்து வந்தான். அவன் ஒரு நாள் மனநோய் மருத்துவமனைக்குள் சென்றான். டாக்டரைச் சந்தித்தான். இருவரும் சிறிது நேரம் பேசிய பின்னர் டாக்டர், அவரை நோக்கி, நீங்கள் இப்போது வந்திருக்கும். காரணம் என்ன? என வினவினார்.

பலராமன், உங்களுக்கு எவ்வளவு 'பணம்' வேண்டுமானாலும் கொடுக்கி றேன் சார், என் மனநோயைத் தீர்த்து விடுங்கள் போதும். "நான் எப்போதும் சோகத்திலேயே வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறேன்". ஆகவே, என்னால் எப்போதும் மகிழ்ச்சியாய் இருக்க முடியவில்லை. ஏதேனும் வழி சொல்லுங்கள் டாக்டர்! என மிகுந்தசோகத்துடன் கேட்டான்.

அவன் மீது பரிதாபம் கொண்டு, அவரைப் பல விதமாகச் சோதித்தார் டாக்டர், எந்த ஒரு முடிவுக்கும் வர இயலாதவராய் அவனிடம் உங்களு டைய மனதையும், உடலையும், சோதித்துப் பார்த்ததில் உங்களிடம் எந்தக் குறையும் இல்லை, ஆனால் நீங்கள் எப்போதும் மகிழ்ச்சியுடன், சந்தோசமாக சிரித்துக் கொண்டே இருந்தால் போதும்.

தங்கள் மனத்தில் உள்ள சோக உணர்ச்சி 'பஞ்சாய்ப் பறந்துவிடும்' என்றார் டாக்டர்.

அதைக் கேட்ட அந்த மனநோயாளி, அதுதான் என்னால் முடியவில்லை டாக்டர்.

அதற்குத் தீர்வாகத்தான் மனோதத்துவ ரீதியிலான மருத்துவம் வேண்டித்தானே உங்களிடம் வந்திருக்கிறேன் என்றான் பலராமன்.

சரி, அப்படியென்றால் ஒன்று சொல்கிறேன் கேளுங்கள். இப்போது இந்த ஊரில் வெகுபிரபலமான சர்க்கஸ் (ஜமுனா) ஒன்று வந்திருக்கிறது. அதில் மக்களை மிகவும் 'குலுங்க, குலுங்கச்' சிரிக்க வைத்து மகிழ்வூட்டும் பல நிகழ்ச்சிகளைச் செய்யும் ஒரு அற்புதக் கோமாளி இருக்கிறானாம். நீங்கள் அங்கு சென்று சர்க்கஸை கண்டு மகிழுங்கள் ரொம்பவும்

*மகிழ்ச்சியாக இருக்கும் என்றார் டாக்டர்.*

*மேலும், அந்தக் கோமாளியின் கூத்துக்களையும் கண்டு நீங்கள் குலுங்கக், குலுங்கச் சிரித்து உங்களையே மறந்து இருப்பீர்கள். இதனால் மனநிலை மாற்றம் ஏற்படும் என்றார் டாக்டர்.*

*இதைக் கேட்ட பலராமன் முகம்வாடியது, கண் கலங்கி நீர் வடிந்தது ஏன் அழுகிறாய்? என்றார் டாக்டர், ஐயா! அத்தனை பேரையும் வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் கோமாளி வேறுயாருமில்லை, அது நான் தான் என்று உரக்கக்கூறி அழுது கொண்டே சொன்னான் பலராமன்.*

*அடடே! மற்றவரைச் சிரிக்க வைக்கும் ஒரு மாபெரும் கோமாளிக்குத் தன் வாழ்வில் சிரித்து சந்தோசமாக வாழ முடியாத அளவிற்கு சோகமா? என டாக்டர் மனதில் பலவாறு எண்ணம் உதித்தது. அவனின் மனநோய்க்கான காரணத்தை அறிய எண்ணினார் டாக்டர்.. நேரடியாகவே கேட்பது நாகரிகம் அல்ல என்று எண்ணியபோதே பலராமனே தன்னுடைய அமைதியின்மைக்கான காரணத்தை சொல்லத் தொடங்கினான்.*

*டாக்டர் ஐயா நான் என்னுடைய பெற்றோருக்கு எட்டாவது குழந்தையாம் அதுவும் நான் பிறந்தபோது என்னுடைய தொப்புள்கொடியானது உடல் முழுவதும் சுற்றி இருந்ததாம், அப்படிபிறந்த குழந்தை 'வீட்டுக்கு ஆகாதாம்'*

*அதாவது,*

***'மாலை சுற்றிப் பிறந்தால் மாமனுக்கு ஆகாது'***

***'தாலி சுற்றிப் பிறந்தால் தகப்பனுக்கு ஆகாது'***

***'கொடி சுற்றிப் பிறந்தால் கோத்திரத்திற்கு ஆகாது'***

*என முன்னோர்கள் சொல்வதை வைத்து எனது உறவினர்கள் என்னைக் கொல்லச் சொன்னார்கள், எனது பெற்றோர்களுக்கு கொல்ல மனமின்றி குப்பைத் தொட்டியில் போட்டு விட்டார்கள் என்னை ஒரு பாட்டி எடுத்து 'அனாதை இல்லத்தில்' சேர்த்தது நானும் விவரம் தெரிந்து வெளியுலகத்தைக் காணுமுன் அந்தப் பாட்டியும் விஸயத்தை சொல்லீட்டு இறந்துபோச்சு.*

விடுதியில் உள்ள சக தோழர்களைச் சிரிக்க வைப்பது எனது பொழுது போக்காக இருக்கும் அப்படி இருக்கையில் ,ஒரு நாள் எங்கள் விடுதியில் கலை நிகழ்ச்சி நடந்தது. அதில் நிறைய சகோதர, சகோதரிகள் கலந்து கொண்டனர். நானும் கலந்து கொண்டு எல்லோரையும் சிரிக்க வைத்தேன் .அப்போது அந்த கலை நிகழ்ச்சிக்குச்' சிறப்பு விருந்தினராக' வந்தவர் 'இன்ஸ்பெக்டர் ஐயா நெப்போலியன்' அவர்கள் என்னைப் பாராட்டி பரிசு கொடுத்து நீ நன்றாக நடித்து நகைச்சுவை செய்கிறாய், எனக்கு தெரிந்த ஜமுனா சர்க்கஸ் கம்பனி உள்ளது அதில் சேர்ந்து கொள்கிறாயா? என்று கேட்டார்.

உடனே சரி. என்றேன், என்னை புகழ்பெற்ற சர்க்கஸில் சேர்த்தவர் இன்ஸ்பெக்டர் நானும் நன்றாக நடித்து நகைச்சுவையாகப் பேசியதைக் கண்டு, ஒரு ரசிகர் மன்றமே உருவானது, நல்லவசதியும், நிறையச்சொத்தும், இரண்டு அடுக்கு மாடிவீடும் கட்டியுள்ளேன்.

மேலும், நிலம், ரியல்எஸ்டேட் என நிறைய வசதியுடன் இருக்கிறேன். ஆனால் எனக்கு யாரும் பெண் தர மறுக்கிறார்கள் காரணம் அனாதை, கருப்பாக இருக்கிறேன் வயது 45-யை கடந்து விட்டதால் பெண்தரவும் மறுக்கிறார்கள் ஆகவே சொந்தம், பந்தம் என ஒருவரும் இல்லை, என் வாழ்க்கையே கேள்விக் குறியாகிவிட்டதே! என்று எண்ணும் போது மிகவும் மன வருத்தமாயுள்ளது சார். என்று கூறி முடித்தவனிடம் கவலைப்படாதே, உனக்கும் கீழ் எவ்வளவு பேர் துன்பப்படுகின்றார்கள். தன்னம்பிக் கையுடன் முன்னேற்ற நிலை அடைந்துள்ளார்கள், தம்முடைய தகுதிக்கு ஏற்ற வாழ்க்கை யைமைத்துக் கொள்கிறார்கள். ஆகவே, உன் உடல்நிலையில் எந்தக் குறைபாடுமில்லை வீடு, நிலம், வசதியெல்லாம் உள்ளது, ஒரே ஒரு குறை இல்லற வாழ்க்கையில்லை அவ்வளவுதானே? அதற்கு ஏன் கவலைப்படுகிறாய்? அதற்கு நான் உதவிசெய்கிறேன் நாளை இங்கு வா உனக்கு என்னால் ஆன உதவி கண்டிப்பாக இருக்கும் என்றார் டாக்டர்.

அன்று இரவு டாக்டர், தன்னுடைய குடும்பத்தாரிடம் பலராமனைப் பற்றிய செய்திகளைக் கூறினார். அவன் வாழ்க்கையில் நடந்த துயரமான நிகழ்வைப் பற்றிக் கூறிய பின், சிறு விவாதத்திற்கு

*பின் அனைவரும் தூங்கச் சென்று விட்டனர்.*

*மறுநாள் காலை பலராமன் வந்தான். அழைத்துக் கொண்டு திருச்சிக்கு அருகேயுள்ள சமயபுர கோவிலில் திருமணமண்டபத்திற்கு அழைத்துச் சென்றார் டாக்டர். பலராமனோ ஏன் இங்கு அழைத்து வந்துள்ளார் என்ற குழப்பத்துடனேயே முன்சீட்டில் அமர்ந்தான்.*

*அப்போது மணமேடையில் மணப்பெண் மிகவும் அழகாக! தங்கச்சிலையாக! தேவதைபோல் அமர்ந்திருந்தாள்.*

*அப்பெண்ணைப் பார்த்ததும் கொஞ்ச நேரம் தன்னையே மறந்து போனான் இந்தப் பெண்ணுக்குத் ‘தாலிகட்டும் மச்சக்காரன்’ யாரோ? எனத் தன்னுள் முணுமுணுக்கையில்.*

*டாக்டர் வந்தார் இந்தாப்பா! என ஒரு பையைக் கொடுத்தார். என்ன சார்! என்றான் பலராமன். இதில் புது ஆடையுள்ளது அதோ அந்த அறையில் சென்று மாற்றிக் கொள் என்றார் டாக்டர்.*

*இல்ல சார் பரவாயில்லை என்றான் பலராமன். அடபோப்பா! என்றார் டாக்டர், சாரி சார் எனக் கூறியவன், அறைக்குள் சென்று உடைமாற்றி வெளியே வந்தவுடன் அவன் கழுத்தில் மாலையைப் போட்டார் டாக்டர்.*

*சார்... என்றவனிடம் மண மேடையில் இருக்கும் ’என் மகள் கழுத்தில் தாலியைக் கட்டு’ என்றார் டாக்டர்.*

*ஐயா! தெய்வமே! தன்னுடைய இருகரம் கூப்பி கண்ணீர் மல்க, நன்றி கூறி, காலில் விழுந்தான் அழாதே பலராமா உன்னைப் பற்றி என் குடும்பத்துடன் நேற்று இரவு நன்கு ஆலோசித்த பின்புதான் இந்த முடிவுக்கு வந்துள்ளேன்.*

*என்னுடைய பெண் ராணிக்கு வயது-35 நிறைவாகியுள்ளது. இன்னும் திருமணம் ஆகவில்லை காரணம் அவளுக்கு ஏதோ தோசம் உள்ளது என்றும், மீறித் திருமணம் செய்தால் மாமனார், மாமியார் உயிருக்கு உத்தரவாதம் இல்லையாம் என்று கூறி வந்த வரன் எல்லாம் தட்டிப் போய்விட்டது.*

*ஆகவே நீயோ யாருமில்லாத அனாதை என்றாயே? அதுதான் என் பெண்ணிடம் நேற்று இரவு பேசினேன் அவளும் சம்மதம் சொன்னாள் அதனால் தான் இந்த திடீர் திருமண ஏற்பாடு செய்தேன் என்றார் டாக்டர்.*

*இதில் உனக்கு சம்மதமா? என்றார். சம்மதம் என்பதைத் தன் இருகை கூப்பிச் சொன்னான் டாக்டரின் உயர்ந்த உள்ளம் கண்டு பூரித்துப் போனான் பின்பு ரொம்ப சந்தோசம் மாமா! என உரிமையுடன் கூறி விட்டு மணமேடையில் இருக்கும் மணப் பெண்ணின் கழுத்தில் தாலியைக் கட்டினான் .பின்பு தன்னைத்தானே கிள்ளிக் கொண்டான் . அந்த தேவதையைத் திருமணம் செய்யும் மச்சக்காரன் நானா? என்று தன்னுள்ளே மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தான்.*

*சில வருடம் சென்றது ஒரே பிரசவத்தில் ஆண் ஒன்றும் பெண் ஒன்றுமென இரட்டைக் குழந்தை பிறந்தது. பலராமன் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை.*

*ஆனால், அக் குழந்தைகளில் ஒரு குழந்தை மட்டும் பலராமனைப் போன்று 'தொப்புள் கொடி சுற்றிப் பிறந்து இருந்தது'. "ஒரு நிமிடம் ஆடிப் போனான்" எனினும் தன் பெற்றோர் செய்த தவறினைத் தானும் செய்யக் கூடாது என்பற்காகவே, தன்னுடைய சொத்தில் பாதியை அக் குழந்தையின் பெயரில் உயில் எழுதிவைத்தான்.*

*அந்தக் குழந்தையிடம் மிகவும் நெருக்கமாகப் பழகினான், மார்பிலே அணைத்தபடி தன்னைத் தம்முடைய பெற்றோர்கள் செய்ததை நினைத்துக் கொண்டான். கண்ணீர் கசிந்தது.*

*உள்ளங்கள் அழுதாலும் உதடுகள் சிரிக்கட்டுமே! எனத் தன் கோமாளியின் வாழ்க்கையில் டாக்டர் செய்த சிறிய மாற்றம் தான் இன்று சிறகடிக்கும் மாற்றமாயின என்று, தன்னுள் நினைத்துக் கொண்டு டாக்டருக்கு மனதிலே நன்றி கூறிக் கொண்டான்.*

*"கடந்தகால துன்பத்தை எண்ணி வருந்துவதை விட*
*நிகழ்கால இன்பத்தை எண்ணி மகிழ்ச்சி கொள்வோம்"*

*'வாழ்க்கை வாழ்வதற்கே' என்று தன்னுள்ளே அசைபோட்டுக் கொண்டு புதிய உறவினால் தன்னையே மறந்து தமது மழலைகளுடன் கொஞ்சி மகிழ்ச்சியாக இல்லற வாழ்வில் இனிதே பயணித்தான்.*

## லஞ்சம்

*"பிறப்பதற்கே ஊசி*
*மறுத்தால் கத்தி.*
*அழுதால் தாய்ப்பால்*
*இல்லையெனில் புட்டிப்பால்.*
*நோய் வருமுன் காக்க*
*முத்தடுப்பு ஊசி.*
*பிறக்க வைக்க மருத்துவக்கட்டணம்.*
*பிறப்புச் சான்றிதழ் பெற*
*தனிக்கட்டணம்.*
*ஆரம்பப் பள்ளியில் சேர்க்க*
*நன்கொடை.*
*உயர்க் கல்வியில் சேர*
*நுழைவுத்தேர்வு.*
*தேர்ச்சிபெறாவிட்டால் பெருந்தொகை.*
*தேர்வு எழுதிட ஒரு தொகை*
*பட்டம்பெற ஒரு தொகை.*
*வேலைவாய்ப்பு அலுவலகத்தில்*
*பதிவுசெய்ய ஒரு நோட்டு.*
*வேலைக்குத் தேர்வாகச் சில கட்டுகள்.*
*சொந்த ஊருக்கு மாற்றலாக*
*ஒரு கட்டு.*
*பதவி உயர்வுபெற பல கட்டுக்கள்.*
*பெண்ணானால் திருமணத்திற்குப்*
*பெருந்தொகை.*
*வயதானால் உடலுக்கும் தலைக்கும்*
*ஒப்பனைகள்.*
*நோய் வந்தால் விதவிதமாய்*
*மருத்துவச் சோதனைகள்.*
*சாகாமல் இருக்க*
*சர்வதேச மருந்துகள்.*
*செத்துவிட்டால்*
*புதைத்தாலும் எரித்தாலும் பணம்.*
*கிரியைகள் செய்ய*
*கிரமமாய்த் தானம்.*
*இத்தனைக்கும் சேர்க்க வேண்டும்*
*வாழ்க்கை முழுதும் பணம் -*
*இறந்துவிட்டால் ஒரு நோட்டும்*
*உடன்வராது எனத்தெரிந்தும்."*


***இர. குமரேசன்***
*இளங்கலைத் தமிழ் இலக்கியம்*
*இரண்டாமாண்டு.*


## அறிவியல்

*"இனிவரும் காலம்*
*பாலைவனமும் சோலைவனமாகும்*
*மரபணு மாற்றத்தால்"*


***என். தினேஷ்***
*முதுகலை உயிர்த்தொழில்நுட்பத்துறை*
*இரண்டாமாண்டு.*


## வாழ்க்கை

*"தாயின் கருவறையிலிருந்து*
*கீழிறங்கிக்*
*கல்லறை வரை நாம் செல்லும்*
*தூரம்தான் வாழ்க்கை.*


***தி. நந்தகுமார்***
*முதுகலை உயிர்த்தொழில்நுட்பத்துறை*
*இரண்டாமாண்டு.*

# யானை

***யானைக்கு 40 பெயர்கள்***

*அத்தி, ஆம்பல், இபம், உவா, உம்பல், எறும்பி, கரணி, கறையடி, களிறு, களடம், கடிவை, கயம், கரி, கும்பி, கைம்மா, சுண்டாலி, சிந்தூரம், தந்தி, நந்தாவனம், தும்பி, தோல், நாகம், பதடு, தூங்கல், நால்வாய், திருமதம், குஞ்சரம், பூட்கை, புகர்முகம், புழைக்கை, பெருமா, பொங்கடி, போதகம், மதமா, மதகயம், மருண்மா, மதாவனம், மாதங்கம், வழுவை, வாரணம்.*

***அ. அபுயாஸீர்,***

*இளங்கலை உயிர்த்தொழில்நுட்பத்துறை*
*முதலாண்டு அ பிரிவு.*

# சிந்தனைக்கு

*நண்பர்களே!*

*செத்துப்போன வண்ணத்துப் பூச்சியைச் சுமந்து செல்லும் எறும்புகளுக்குப் ‘பிணத்தைச் சுமக்கிறோம்’ என்ற வருத்தமும் இல்லை, ‘விருந்தினைச் சுமக்கிறோம்’ என்ற கர்வமும் இல்லை.*

***என். ஜனபிரியா,***

*இளங்கலை துகிலியல் மற்றும்*
*ஆடைவடிவமைப்புத்துறை.*

# கருவிகள்

***ஹைட்ரோ.:.போன்***

*தண்ணீருக்கு அடியில் ஒலியை அளப்பது.*

***டாக்கோமீட்டர்***

*விமானத்தின் வேகத்தை அளப்பது.*

***ஆல்டிமீட்டர்***

*விமானம் பறக்கும் உயரத்தை அளப்பது.*

***ஷெர்லாக்***

*நீர் மாசுபடுதலைக் கண்டுபிடிக்கும் கருவி.*

***டைனோமீட்டர்***

*வேகத்தை அளக்கும் கருவி.*

***ஹைட்ரோமீட்டர்***

*தேனின் தூய தன்மையை அறியப் பயன்படுவது.*

***ஹெர்ட்ஸ்***

*ரேடியோ அலைகளை அளக்க உதவுவது.*

***அகோமீட்டர்***

*நீரின் ஆழத்தை அளக்கப் பயன்படுவது.*

***லைன்டெஸ்டர்***

*மின்சார ஓட்டத்தைக் கண்டுபிக்கும் கருவி.*

***பிரன்னாக்***

*கால் அளவை அளக்கப் பயன்படுவது.*

***இ. காயத்ரி, எஸ். கீர்த்தனா***

*முதுகலை உயிர்த்தொழில்நுட்பத்துறை*
*இரண்டாமாண்டு.*

## பொருந்தாப் பெயர்கள்

**பறக்கும் நரி**

*இது ஒருவகை வவ்வால்.*

**கண்ணாடிப் பாம்பு**

*இது ஒருவகைப் பல்லி.*

**எரி நட்சத்திரம்**

*இது ஒரு விண்கல்.*

**விட்ரியால் ஆயில்**

*கந்தக அமிலம்.*

**டிட் மவுஸ்**

*ஒரு வகைப் பறவை.*

**தொகுப்பு:**
**செ. உதய சங்கரி,**
*இளங்கலைத் தமிழ் இலக்கியம் முதலாண்டு.*

## அறிவோம் அரசியல்

- *இந்தியாவின் மொத்த சட்ட மன்றத் தொகுதிகள் 4120.*
- *இந்தியாவில் மிக அதிக சட்டமன்றத் தொகுதிகளை உடைய மாநிலம் உத்திரப்பிரதேசம். மொத்தச் சட்டமன்றத் தொகுதிகள் 403.*
- *இந்தியாவில் மிகக் குறைவான சட்டமன்றத் தொகுதிகளைக் கொண்ட மாநிலம் புதுச்சேரி. மொத்தத் தொகுதிகள் 30.*
- *இந்தியாவில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 790.*
- *இந்தியாவில் நாடாளுமன்ற நியமன உறுப்பினர்களின் எண்ணிக்கை மக்களவையில் 2, மாநிலங் களவையில் 12. ஆக மொத்தம் 14 உறுப்பினர்கள்.*
- *இந்தியாவில் உள்ள மக்களவை தொகுதிகள் 543 (நியமன உறுப்பினர்கள் தவிர).*
- *இந்தியாவின் மாநிலங்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 233 (நியமன உறுப்பினர்கள் தவிர).*
- *தமிழகத்தின் மொத்தச் சட்ட மன்றத் தொகுதிகள் 234.*
- *தமிழகத்தின் மிகப்பெரிய சட்ட மன்றத் தொகுதி வில்லிவாக்கம்.*
- *இந்தியாவில் சட்ட மன்ற, நாடாளுமன்றத் தேர்தல்கள் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும்.*
- *இந்தியா இதுவரை சுதந்திரத் திற்குப் பின்னர் 15 நாடாளுமன்ற தேர்தல்களை நடத்தியுள்ளது.*

**ரா. மதி,**
*இளங்கலை வணிக நிர்வாகவியல் துறை இரண்டாமாண்டு.*

## மருத்துவக் குறிப்புகள்

**'உணவே மருந்து; மருந்தே உணவு'**

- *சீரகத்தை வறுத்து அரைத்துப் பொடிசெய்து வாழைப்பழத்துடன் உண்டால் நன்கு தூங்க முடியும்.*
- *எலுமிச்சை சாதத்தை அவ்வப்போது உண்டால் பித்தம் தணியும்.*
- *தக்காளிச் சாறினைச் சாப்பிடும்போது அதன் விதைகளைத் தவிர்க்க வேண்டும்.*
- *பல் ஈறுகளை ஆட்காட்டி விரல்களால் தேய்த்துவிட்டால் பல் வலிமை யடையும்.*
- *அந்தந்தப் பருவக்காலங்களில் விளையும் பழங்களைத் தவிர்க்காமல் உண்ணவேண்டும்.*
- *தேங்காய்ப்பால் குடித்து, கொப்பளித் துவர வாய்ப்புண், தொண்டைப்புண், வயிற்றுப்புண் குணமடையும்.*
- *வேப்பங்கொழுந்து, துளசி ஆகியவற்றைத் தினமும் சிறிதளவு உண்டால் ஒவ்வாமை நீங்கும், உடல் பொலிவுபெறும்.*
- *தினமும் ஒரு கப் தயிர் உண்டால் இரத்தக்குழாய் அடைப்புகள் நீங்கும்.*
- *நந்தியாவட்டைப் பூவால் கண்ணில் ஒத்தடம் கொடுத்தால் கண் எரிச்சல் நீங்கும்.*
- *சாதம் வடித்த கஞ்சியினை வியர்குருவின் மீது தடவினால் அது நீங்கும்.*

**எஸ். கிருஷ்ணமூர்த்தி**

*இளங்கலை வணிகவியல் துறை*

*இரண்டாமாண்டு.*

## ஏழு வகை ஆண்டுகள்

*ஏழு வகையான ஆண்டுக் கணக்குகள் உண்டு.*

*1.லீப் ஆண்டு – 366 நாட்கள்*

*2.சந்திர ஆண்டு – 954 நாட்கள்*

*3.ஜீலியன் ஆண்டு – 365.25 நாட்கள்*

*4.சூரிய ஆண்டு – 365 நாட்கள் 5 மணிகள் 48 நிமிடங்கள் 436 வினாடிகள்*

*5.சைடிரியல் விண்மீன்கள் ஆண்டு - 365 நாட்கள் 6 மணிகள் 9 நிமிடங்கள் 9 வினாடிகள்*

*6.அனாமலிஸ்டிக் ஆண்டு - 365 நாட்கள் 6 மணிகள் 13 நிமிடங்கள் 19.3 வினாடிகள்*

*7.கிரிகோரியன் ஆண்டு - 965நாட்கள் 5 மணிகள் 49 நிமிடங்கள் 12 வினாடிகள்*

**தொகுப்பு:**

**வி. சுபா,**

*இளங்கலைத் தமிழ் இலக்கியம்*

*முதலாண்டு.*

# தமிழின் பெருமை

*சங்க இலக்கியங்களைக் கொண்டு தமிழை மதிப்பீடு செய்யும்பொழுது மூன்றாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது தமிழ் என்பது உறுதிப்படுத்தப் படுகிறது.*

### ***தொன்மை***

*எகிப்து நாட்டின் செங்கடல் கரையின் துறைமுகத்தில் கண்டெடுக்கப்பட்ட உடைந்த பானையில் உள்ள தமிழ் பிராமி (தமிழி) எழுத்துக்கள் கி.மு. முதலாம் நூற்றாண்டைச் சார்ந்ததாகத் தொல்லியல் அறிஞர்கள் கண்டுள்ளனர். இது தமிழின் தொன்மையும் சுமார் 3,000 ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் கடல் கடந்து வாணிகம் செய்த சிறப்பினையும் பறைசாற்றுகிறது.*

### ***சீன கல்வெட்டில் தமிழ்***

*பன்னிரெண்டாம் நூற்றாண்டில் சீனாவில் ஆட்சி செய்த குப்லாய்கான் என்ற அரசரின் ஆட்சியில் காண்டன் நகருக்கு 500 கல் வடக்கே சூவன்சௌ என்ற துறைமுக நகரில் சிவன் கோவில் கட்டப்பட்டது.*

*இந்தக் கோவிலில் உள்ள கல்வெட்டில் கோயில் கட்டப்பட்ட விவரங்கள் தமிழில் பொறிக்கப் பட்டுள்ளது. இறுதி வரி மட்டும் சீன எழுத்தில் உள்ளது.*

*சோழ மன்னர்களுடனான நட்பின் அடிப்படையில் கட்டப்பட்ட இக்கோயிலில் சோழர் காலச் சிற்பங்களும் இடம் பெற்றுள்ளன.*

### ***உலக நாடுகளில் தமிழ்***

*உலகம் முழுவதும் 40 மொழிகளில் தன் ஒலிபரப்பைச் செய்கின்ற பி.பி.சி. நிறுவனம் இந்திய மொழிகளில் தமிழ் மற்றும் இந்தி மொழிகளில் மட்டுமே ஒலிபரப்பு செய்கிறது.*

*42 மொழிகளில் ஒலிபரப்பு செய்யும் சீன வானொலியும் இந்திய மொழிகளில் தமிழ் மற்றும் இந்தி மொழிகளில் மட்டுமே ஒலிபரப்பு செய்கிறது.*

*உலக வரைபடத்தில் உள்ள நாடுகளில் 60-க்கும் மேற்பட்ட நாடுகளில் தமிழ்பேசும் மக்கள் வாழ்கின்றனர்.*

*இலங்கை, சிங்கப்பூர், மலேசியா நாடுகளில் தமிழ் ஆட்சி மொழியாக உள்ளது. தமிழ்நாடு, அந்தமான் மற்றும் புதுச்சேரி மாநிலத்தில் அலுவலக மொழியாகவும் உள்ளது.*

*பெருமைக்குரிய ஜெரூசலம் ஒலிவமலை தேவாலயத்தில் 68 மொழிகளில் எழுதப்பட்டுள்ள இயேசுபிரான் அருளிய ஜெபம் இந்திய மொழிகளில் தமிழ் மொழியில் மட்டுமே எழுதப்பட்டுள்ளது.*

*உலகில் 8.5 கோடிப் பேர் பேசக்கூடிய தமிழ் எண்ணிக்கையில் அடிப்படையில் 18ஆவது இடத்தில் உள்ளது.*

***தொகுப்பு:***

***சா. குணசுந்தரி,***
*இளங்கலைத் தமிழ் இலக்கியம் முதலாண்டு.*

## கருவறை

*“நீ*
*ஒரு முறை மட்டும் அமர்ந்து*
*ஆட்சி செய்யக்கூடிய*
*மீண்டும் அமர முடியாத*
*அரிய சிம்மாசனம்*
*தாயின் கருவறை”*

***தி. நந்தகுமார்***
*முதுகலை உயிர்த்தொழில்நுட்பத்துறை*
*இரண்டாமாண்டு.*

## GOOD THOUGHTS

*Very Good day – Today*
*Very Big Reward – Forgiveness*
*Very Big need – Selfmind*
*Very Simple – Identify the mistake*
*Very Crud disease – Greed*
*Very danger – Over speech*
*Don’t to do – Advice*
*Must to do – Help*
*Way of high – Hard work*
*Don’t lose – Opportunity*
*Don’t forget – Gratitude*

***N. Janapriya***
***I year B.Sc. T.&F.D.***

## குழந்தை வரம்

*“அரச மரத்தையும் சுற்றவில்லை*
*பத்துமாதம் பிள்ளையையும்*
*சுமக்கவில்லை.*
*ஆனால், குழந்தை வரம் பெற்றது*
*குப்பைத்தொட்டி.”*

***தி. நந்தகுமார்***
*முதுகலை உயிர்த்தொழில்நுட்பத்துறை*
*இரண்டாமாண்டு.*

# மறுமணம்

*"மொட்டு ஒன்று மலர்ந்தது*
*மலர்க்கு மணநாள் வந்தது*
*சுற்றங்கள் சூழ்ந்தன*
*கண்கள் மலர்ந்தன*
*கல்யாணக் கோலம் பூண்டன.*
*கணவன் கைகோர்த்து காப்பான்*
*என மந்திரம்.*
*கால நேரம் செய்த சோதனை.*
*அவள் வாழ்வில் கண்டதோ வேதனை*
*கைப்பிடித்த கணவனைக் காலம்*
*கல்லறைக்கு இழுத்துச் சென்றது.*
*பாவம் கோதை!*
*விதி செய்த கொடுமைக்கு*
*அவள் அடைந்தால் சமூகத்திற்கு*
*அடிமை. அன்று -*
*மறுமணம் வழக்கில் இல்லை.*
*மாறியது காலம்; மலர்ந்தது பூக்கோலம்*
*விதியின் விளையாட்டு*
*வேடிக்கையானது.*
*அவள் வாழ்வில் மறுமணம் மலர்ந்தது.*
*வாழ்க்கைத் தோட்டம்*
*பூக்கத் தொடங்கியது."*

**பி. லோகநாதன்**
*இளங்கலை வேதியியல் முதலாண்டு.*

# ஆணவத்தின் அழிவு

*ஓர் புகழ் பெற்ற அரசன் பல நாடுகளிடம் போரிட்டு வெற்றி வாகை சூடி வெற்றி வீரனாகத் திகழ்ந்தான்.*

*'தான் ஒருவனே சிறந்த வீரன். தன்னை வெல்ல எவரும் இல்லை' என்று மிகுந்த ஆணவத்துடன் ஆட்சிப் புரிந்து வந்தான்.*

*திருமணமாகி ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர், கடும் தவத்தால் அரசனுக்கும் அரசிக்கும் ஓர் அழகிய ஆண் குழந்தை பிறந்தது.*

*குழந்தை பிறந்து ஓர் ஆண்டு கழிந்த பின்னர் தன் மகன் தன்னைப்போல் வீரனாகத் திகழ வேண்டும் என்னும் ஆசையால் தான் வீரத்தைக் கற்றுக்கொண்ட கல்விச் சாலையில் தன் மகனைச் சேர்த்து, சிறந்த முறையில் வீரத்தைக் கற்றுத் தருமாறு குருவிடம் பணிவுடன் வேண்டினார்.*

*குருவும் கற்றுத் தருகிறேன். ஆனால், நீண்ட காலம் தேவைப்படும் கல்விச்*

*சாலையிலேயே மகனை விட்டுச் செல்லுங்கள் என்று கூறினார். குருவின் கட்டளைக்கு அரசர் ஒப்புக்கொண்டார்.*

*மகனைப் பிரிந்து 18 ஆண்டுகள் கடந்தன. அரசன் 18 ஆண்டுகளில் பல நாடுகளிடம் போரிட்டு வெற்றி வாகை சூடினான்.*

*அரசனின் ஆணவமோ பல மடங்கு பெருகியது. அரசனின் வீரப்புகழ் உலகம் எங்கும் பரவியது. 'தன்னை வீரத்தால் வெல்ல எவரும் இல்லை' என்ற மன்னரின் ஆணவம் குறையவே இல்லை.*

*18 ஆண்டுகளுக்குப் பின்னர் ஒரு நாள் ஓர் இளைஞன் அரண்மனைக்கு வந்து அரசனைப் பார்த்து, தங்களை நான் வீரத்தால் வெல்வேன். என்னிடம் போர் புரிய வாருங்கள் என்று கூறினான். மிகுந்த கோபத்துடன் போர் புரிய மறுத்தான் மன்னன்.*

*இளைஞனோ தாங்கள் வீரத்தைக் கற்றுக்கொண்ட கல்விச் சாலையில் தான் நானும் வீரத்தைக் கற்றுக் கொண்டேன். தங்களைக் கண்டிப்பாக என்னால் வெல்ல முடியும். என்னுடன் போர் புரிய வாருங்கள் என்று வற்புறுத்தினான்.*

*அரசன் கோபத்தின் உச்சிக்கே சென்றுவிட்டான். உடனே தன் வாளை உருவி ஒரே வீச்சில் இளைஞனின் தலையினை வெட்டினான். இந்தச் செய்தி ஊரில் பரவியது. குரு இதனைக் கேள்வியுற்று மன்னரைப் பார்க்க வந்தார்.*

*அவர் மன்னரிடம், " மிகுந்த ஆணவத்துடன் திகழ்ந்த அரசே! வந்தது தங்கள் மகன் என்று கூடத் தெரியாமல் கொன்றுவிட்டீர்களே. தங்களை வெல்ல தங்கள் மகனால் மட்டுமே முடியும் என்பதை உணர மறந்துவிட்டீர்களே" என்று கூறினார்.*

*மன்னர் தன் ஆணவத்தின் விளைவினைக் கண்டு வருந்தி இறந்தார்.*


***எஸ். சத்யா***

*இளங்கலை வணிகவியல் முதலாண்டு*


## சிந்தனைக்கு

*உண்மையான அன்பிற்காக உயிரையும் விடு. உயிர்போகும் நிலையிலும் உண்மையான அன்பை விட்டுவிடாதே.*


***எம். ஜானகி,***

*இளங்கலை வணிகவியல் முதலாண்டு*

## தாய்

"தவமாய்த் தவமிருந்து
என்ன நீயும் பெத்துப்புட்ட.
பெத்து வளத்திப் புட்டு
பாதியில விட்டுப் புட்ட.

சிப்பிக்குள் முத்தாக - இவ்ளோநாள்
இருந்துப் புட்டு
வழிதெரியா கப்பலாட்ட – நடுகடலுல
மாட்டிக்கிட்டேன்.

நீ மட்டும் கூட இருந்தா
நிலவுகூடப் பக்கத்துல.
இப்ப நிலவ கூடத் தொட்டுப்புடுவேன்
உன்ன வந்து எப்படித்தொட?.

வேரில்லா மரம்
ஆனேனே!
உயிர் இருந்தும் பிணம்
ஆனேனே!
இப்ப எல்லாமே
உன்னாலே!

என்ன பெத்த வலி
உனக்கு எப்படியோ
நீ செத்த வலி
எனக்கு அப்படி.

என்னோட நீ வாழ
உனக்கென்ன சோம்பலா?
என்னத் தனியா விட்டுப் புட்டு
போயிட்டியே சாம்பலா.

உடல் இங்கிருக்க
உயிர் மட்டும்
எங்க போயிருச்சு?
என்ன விட்டுப் புட்டு
தண்ணீல சாம்பலாச்சு."

**டி. கார்த்திகேயன்**
இளங்கலை உயிர்த்தொழில்நுட்பத்துறை
முதலாண்டு அ பிரிவு

## இன்று இவர்கள் பேசினால்

**வள்ளுவர்**

"இக்காலத்திற்கு ஏற்ற குறள் எழுத முயன்றேன். என் எழுத்தாணியே என்னைக் கொன்றது."

**பெரியார்**

"தெருவெங்கும் கோயில்கள்.
தெரிந்தது மூட நம்பிக்கை.
ஒழிந்தது தன்னம்பிக்கை."

**புத்தர்**

"ஆசையைத்தானே ஒழிக்கச் சொன்னேன். என்னையே ஒழித்துவிட்டீர்களே! என் மீது உங்களுக்கு அவ்வளவு ஆசையா?"

**பி. லோகநாதன்**
இளங்கலை வேதியியல் முதலாண்டு.